# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590**


**ஆணை நாள் 11.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள்.**

**(1) SA 175340/E/2023 (2) SA 18521/E/2023 (3) SA 18522/E/2023 (4) SA 18523/E/2023 (5) SA 18537/E/2023 (6) SA 18538/E/2023 (7) SA 18539/E/2023 (8) SA 18540/E/2023 (9) SA 18541/E/2023 (10) SA 18545/E/2023**

திரு டி.குமார் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

1) இவ்வழக்கு குறித்த ஆவணங்களை இன்று (10.06.2026) பரிசீலித்த ஆணையம் இவ்வாணையத்தின் 26.03.2025 நாளிட்ட உத்தரவை இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர்/சோழிங்கநல்லூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் இன்று வரையில் (11.06.2026) நிறைவேற்றவில்லை என்பதை கண்டனத்துடன் இவ்வாணையம் பதிவு செய்கிறது

2) இதற்கிடையில், மனுதாரர் 25.07.2025 மற்றும் 15.09.2025 ஆகிய தேதிகளில் இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதங்களில் மேற்படி வழக்குகளில் தனக்கு இதுநாள் வரை தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3) ஆகவே, **இவ்வாணையத்தின் 26.03.2025 நாளிட்ட உத்தரவை நிறைவேற்றிவிட்டு,** அது குறித்த அறிக்கையை **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

4) மேலும், இவ்வாணையத்தின் 26.03.2025 நாளிட்ட உத்தரவை நிறைவேற்றத் தவறிய காரணத்தால் அன்றைய பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமை சட்டம் 2005

பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அதிகபட்ச அபராதம் ஏன் விதிக்கலாகாது என்பதற்கான விளக்கத்தையும் மற்றும் சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அவரது உயரதிகாரிக்கு ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தையும் அவரிடமிருந்து பெற்று **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

5) மேலும், இவ்வாணையத்தின் 26.03.2025 நாளிட்ட உத்தரவை நிறைவேற்றாமல் மனுதாரருக்கு தகவல் வழங்குவதில் காலதாமதம் செய்ததற்கும், மனுதாரருக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தியதற்காகவும், **தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் மனுதாரருக்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இழப்பீடாக பொது அதிகார அமைப்பு வழங்கி மனுதாரர்** அதை ஏற்பளிப்பு செய்த விவரத்தினை **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

6) மேற்குறித்த உத்தரவுகளை நிறைவேற்ற தவறும்பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்று சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள்.**

**(1) SA 175340/E/2023 (2) SA 18521/E/2023 (3) SA 18522/E/2023 (4) SA 18523/E/2023**
**(5) SA 18537/E/2023 (6) SA 18538/E/2023 (7) SA 18539/E/2023 (8) SA 18540/E/2023**
**(9) SA 18541/E/2023 (10) SA 18545/E/2023**

பெறுநர்

மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்.
சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை மாவட்டம்,

பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம். சோழிங்கநல்லூர் வட்டம், (26.03.2025 தேதியில்)
சென்னை மாவட்டம்
(மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர் சோழிங்கநல்லூர் மூலமாக)

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்.
சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை மாவட்டம்

திரு டி.குமார், ப்ளாட் எண்.10, கதவு எண் 1/358,
முதலாவது பிரதான சாலை, ஶ்ரீ சாய் நகர், துரைப்பாக்கம்,
சென்னை – 600 097

Copy to File
CR/PA